egd. No. M. 4593.

தனிப்பிரதி விலை { உள்நாடு 0-1-0 / பர்மா, மலேயா, 0-1-6 (6-காசு)

# குடி அரசு

Estd 1924.

பக்கங்கள் 6. சனி வெளியீடு. வருட சந்தா { உள்நாடு ரூ. 5-0-0 / வெளிநாடு ரூ. 7-0-0

10 } ஈரோடு 1-6-1946 வைகாசி மீ 13உ { மலர் 34

## மதுரையில் நடந்ததென்ன?

### கும்பகோணத்தில் பெரியார் பேசியது.

(சென்றவாரத் தொடர்ச்சி)

12ந்தேதி காலையில் சில காங்கரஸ்காரர்கள்முதலில் காலித்தனமாக மதுரையிலுள்ள கறுப்புச்சட்டைப்படை காரியாலயத்தில் புகுந்து, கொடியை இறக்கி கொளுத்தியதோடு அங்குள்ள பிரசாங்களையும் மற்ற சாமான்களையும் எடுத்து நாசப்படுத்தியிருக்கிறார்கள். பிறகு வெளியில் கட்டப்பட்டிருந்த இயக்கக் கொடிகளையெல்லாம் அவிழ்த்து நாசப்படுத்தியுள்ளார்கள். இவற்றின்மூலம் காலிகள் தங்களுக்கு ஏற்படுத்திக்கொண்ட வெறியை தெருவில் தென்படும் கறுப்புச்சட்டைப் படையைச் சேர்ந்த பெண்களிடமும், ஆண்களிடமும் பாய்ந்து அவர்களைத் தாக்குவதில் பயன்படுத்திக்கொண்டார்கள். இதற்குள்ளாக கறுப்புச்சட்டைப்படைக்காரர்கள் கோயிலுக்குள் செருப்புப் போட்டுக்கொண்டு போனார்களென்றும், பெண்களை அவமதித்துவிட்டார்கள் என்றும் விக்கிரகங்களைத் தொட்டுவிட்டார்கள் என்றும் தகரக்குழாய்மூலம் ஊதி பொது மக்களைக் கிளப்பிவிட ஆரம்பித்துவிட்டார்கள். இதில் கலந்த சில காலிகள் தாங்களும் கறுப்புச்சட்டை போட்டுக்கொண்டு விக்கிரகத்தைக் குறைகூறி இருக்கிறார்கள். அதோடுகூடவே அன்று இரவு "போர்வாள்" நாடகம் நடத்த யாராய் இருந்த நடிகத்தோழர், ஒத்திகைபார்த்துக்கொண்டிருந்த இடமாகிய ண்டுக்கல் ரோட்டிலுள்ள 'ராஜபவனம்' ன்கிற கட்டிடமாகிய நடிகமணி ராதா வர்கள் வீட்டிற்குச்சென்று அட்டூழியம் துவக்கிவிட்டார்கள். இப்படி காரியங்கள் நடந்துகொண்டிருக்கும்பொழுது சய்கை நடந்த இடத்துக்கு சுமார் அல்லது 1½ மைல் தூரமுள்ள கொட்டகைக்கு சில தொண்டர்கள் வந்து இம்மாதிரி காரியம் டவுனுக்குள் நடப்பதாக தொண்டர் தலைவர்களிடம் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் என்னிடம் சொன்னார்கள். நான் உடனே யாவரும் கொட்டகைக்குள் வரவேண்டுமென்றும், கொட்டகையைவிட்டு வெளியே செல்லக்கூடாதென்றும் கண்டிப்பாகத் ட்டப்படுத்திவிட்டேன்.

ஆனால் சில தொண்டர்கள் நடிகமணி இராதா அவர்களையும் அந்த வீட்டிலுள்ள தொண்டர்களையும் காப்பாற்ற வேண்டுமென்று சுமார் 100 பேர்கள் ரயில் அவசரமாக டவுனுக்குள் ஓடியிருக்கிறார்கள். அது எனக்குத் தெரியாது என்றாலும் அந்தக் கூட்டத்தை வழியே தடுத்து ஒரு இடத்தில் பந்தோபஸ்தாக வைத்துவிட்டார்கள் என அறிந்தேன். இந்தச்சேதி தெரிந்த திராவிடர்கழக பொதுக்காரியதரிசி தோழர் திராவிடமணி அவர்கள் இந்தத் தொண்டர்களை அழைத்துக்கொண்டு வருவதாகச் சொல்லி ஒரு சப் இன்ஸ்பெக்டரைக் கூட்டிக்கொண்டு டவுனுக்குள் சென்றார், அவரை வழிமறித்து அடித்து இருக்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் கொட்டகைக்குள் ஜனங்களுக்கு பெரிய பீதியும், பயமும், ஆத்திரமும், பதட்டமும் ஏற்பட்டுவிட்டது. இதையறிந்த நான் ஜனங்களுக்கு சமாதானம் சொல்லி அடக்கிக்கொண்டு இருந்தேன். அதுபோது ஜில்லா சூப்பிரண்டும் சில போலீஸ் அதிகாரிகளும் நகர மாஜிஸ்டிரேட்டுகளும் கொட்டகைக்குள் வந்து நகரத்தில் நடக்கும் காலித்தனங்களைப் பற்றி வருத்தத்தோடு விளக்கி நம்மை யாவரையும் வெளியில் போகவேண்டாமென்றும், ஜாக்கிரதையாக இருக்கவேண்டும் என்றும், தாங்கள் போதிய பாதுகாப்பு அளிப்பதாகவும் சொன்னார்கள். காலித்தனத்துக்கு காரணம் கறுப்புச்சட்டைப்படைக்காரர்கள் கோயிலுக்குள் பெண்களை கேவலப்படுத்தினார்கள் என்பவைகள் சொல்லப்படுகின்றன என்று சொன்னார்கள். நான் அதை கூட்டத்தினரிடம் சொல்லி கண்டிக்கும்போது D. S. P. அவர்கள் இந்தப்படி உங்கள் தொண்டர்கள் செய்ததாக நான் சொல்லவில்லை. காங்கரஸ்காரர்களும், கலகக்காரர்களும் சொல்லுகிறார்கள் என்று சொன்னார். அது காலிகள் அக்கிரமத்தைத் துவக்குவதற்காக இந்த வார்த்தைகளை கற்பனை செய்துகொண்டதாக D. S. P. ஜாடையாகக் காட்டுகிறார் என்றும் எண்ணப்பட்டது. அதற்கேற்றார்போல் வந்த முக்கியமான உத்தியோகஸ்தர்களில் ஒருவர் இன்றைய ஆட்சி அப்படியிருக்கிறதே நாங்கள் என்ன செய்ய முடியும் என்று வருந்தினார். நான் உடனே போலீசாருக்கு சம்பிரதாயமாக நன்றி சொல்லிவிட்டு கூட்டத்தை முடித்துக்கொண்டு ஜாகைக்கு சென்றுவிட்டோம். கூட்டம் முடிவதற்கு முன்பே திராவிடமணியும் நல்ல அடி வாங்கிக்கொண்டே திரும்பி வந்துவிட்டார். மாகாட்டு ஜனங்கள் மிக்க அமைதியாக கொட்டகையை விட்டு வெளிவந்து பல பக்கங்களுக்கு தனித்தனியாய் சென்றவர்கள் போக சுமார் 2000, 3000 பேர் வரையில் ஷெனாய் நகரில் ஏற்படுத்தியுள்ள பல கட்டிடங்களில் போய்த் தங்கிக்கொண்டார்கள். போலீஸ் அதிகாரிகள் மேஜிஸ்டிரேட்டுடன் வந்து சாப்பாட்டுக்கு வெளியில் போகாதீர்கள் என்றும், சாப்பாடு வரும்படி செய்கிறோமென்றும் சொல்லிவிட்டுப் போய்விட்டார்கள். பிறகு விசாரித்ததில் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்த ஹோட்டல்களில் காங்கரஸ்காரர்கள் புகுந்து சாப்பாடுகளை நாசம் செய்துவிட்டதாகவும், சாப்பாடு வராதென்றும் தெரியவந்தது; கொஞ்சநேரத்துக்குள் தடிகளுடனும், கல்லுகளுடனும் காலிகள் வந்து பிரதிநிதிகள் தங்கியிருந்த கட்டிடங்கள் மீது கல்லெறியவும் உள்ளே நுழையவும் ஆரம்பித்தார்கள். ரிசர்வ் போலீசார் துப்பாக்கிகளுடன் இருந்து அவர்கள் கட்டிடங்களுக்குள் புகாமல் தடுத்துவந்தார்கள். எனினும் அவர்கள் கலகமும், கல் வீச்சும் நடந்த வண்ணமாகவே இருந்தது. இதே சமயத்தில் தோழர் வைத்தியநாதய்யர்வந்து காலிகளுடன் குலாவி காலிகளின் புகழ் வார்த்தைகளை பெற்றுக்கொண்டு ஆசீர்வதித்துவிட்டுப் போனார் என்றும் தெரியவந்தது, கொட்டகையில் தீ பற்றி எரிந்துவிட்டதென்று தெரியவந்தது. போலீசாருக்கும் அடியென்றும், ஒரு போலீஸ்காரர் குத்தப்பட்டாரென்றும், ஜில்லா சூப்பிரண்டுக்கு கல்லடிபட்ட காயம் ஏற்பட்டதென்றும் போலீசார் காலிகளை சுட்டார்கள் என்றும் தகவல்கள் எனக்கு வந்த வண்ணமாக இருந்தன: மாலையில் D. S. P., D. S. G., டவுன் மாஜிஸ்டிரேட் முதலியவர்கள் அனுதாபம் தெரிவித்து பிரதிநிதிகளை ஊருக்குப் போக வசதிகள்செய்து கொடுப்பதாகவும், எப்போது போகிறார்கள் என்றும் கேட்டார். காலைமுதல் சாப்பாடு இல்லையாதலால் இன்றே அனுப்பிவிடுங்கள் என்று சொன்னேன். அந்தப்படியே ஆகட்டும் என்று ஒப்புக்கொண்டு வண்டிகள் அனுப்புவதாகச் சொல்லி சென்றுவிட்டார். ஊருக்குள் ஊரடங்கு சட்டம் போடப்போவதாகவும், ஆதலால் யாவரும் வெளியில் போவதற்கு பயப்படவேண்டியதில்லை என்றும் சொல்லிப் போய்விட்டார். ஜனங்களும் அன்றிரவே அனேகர் புறப்பட்டுவிட்டார்கள். காலிகளால் அடிபட்டவர்கள் சுமார் 100 பேருக்கு குறையாது எனலாம். காலிகள் பிரதிநிதிகள் தங்கிய இடத்திலிருந்து கொள்ளையடித்ததும் பிரதிநிதிகள் இடத்திலிருந்து அடித்துப் பிடுங்கியதும்ஆன வகையில் நஷ்டம் ஏற்பட்டது சுமார் 5000, 6000 ரூபாய் இருக்கலாம். கொட்டகை முதலியவை எரிக்கப்பட்டதில் நஷ்டம் 10000, 15000 ரூபாய் இருக்கலாம். வெளியூர் பிரதிநிதிகளில் இரண்டொருவரைக் காணவில்லை எனறு சொல்லப்படுகிறது.

நடிகமணி இராதா அவர்கள் வீட்டில் காலிகள் செய்த காலித்தனத்தினால் நாசமானதும், காணாமல் போனதுமான பொருள் சுமார் 1000 ரூபாய் இருக்கலாமென்று சொல்லப்படுகிறது.

(தொடர்ச்சி 4ம் பக்கம்)

குடி அரசு

1946 ஜூன் மீ 1உ

## மதுரை சம்பவ விசாரணை

மதுரையில் சென்றமாதம் 12ந் தேதி நடந்த கறுப்புச்சட்டைப் படை மாகாண மாநாட்டில் பார்ப்பனர் சிலர் தூண்டுகோலால் காலிகள் செய்த அட்டூழியங்களைப்பற்றி விசாரிக்க சர்க்கார் ஒரு தனி அதிகாரியை நியமித்திருப்பதாக பத்திரிகைகளில் சேதி வந்தது. ஆனால் விசாரணைக்கு ஆக நியமிக்கப்பட்ட அதிகாரி ஒரு பார்ப்பனராகவே நியமிக்கப் பட்டிருக்கிறதைப் பார்க்கிற போது, சர்க்காரார் உண்மையில் இந்த காலித்தனத்திற்கு நீதி வழங்க வேண்டும் என்கின்ற எண்ணத்தின்மீது இந்த தனி விசாரணை உத்திரவு போட்டார்களா அல்லது தனி விசாரணை வேண்டும் என்று நாம் கேட்டதற்கு ஒரு சாக்குக்கழிக்க ஒரு நாடகமாக போடப்பட்டதா என்று சந்தேகப் பட வேண்டியதாக இருக்கிறது. ஏனெனில் மதுரைக் காலித்தனத்துக்கு காரணகர்த்தாவே ஒரு பார்ப்பனராக இருந்திருக்கிறார் என்பது அனேகர்முடிவு. இது தக்க ஆதாரத்தின்மீது கொண்ட முடிவாகும். கறுப்புச்சட்டைப்படைக் காரர்களின்மீது பொய்யான பழிகளைச் சுமத்தி பொதுமக்களுக்கு மனதறிந்தபொய் அறிக்கை விட்டிருப்பவரும் அதே பார்ப்பனர் என்பதும் ஒருபுறம் இருந்தாலும் கறுப்புச்சட்டைப் படையும், கறுப்புச் சட்டைப்படை மாநாடும் பார்ப்பனர்களுக்கு விரோதமாகவே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், இதனால் பார்ப்பனர்கள் மிகவும் தொல்லைப்பட்டு வருவதாகவும், இத்தொல்லையைத் தடுத்து தங்களுக்கு பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும் வெளிப்படையாகவே சர்க்காருக்கு வேண்டுகோள்விட்டு தங்களுக்கு கறுப்புச்சட்டைப்படை, திராவிட கழகம் ஆகியவற்றின்மீது அதிக வெறுப்பு இருப்பதாக காட்டிக்கொண்டதும், தமிழ்நாட்டு பார்ப்பன சேவா சங்கத்தின் பிரமுகர்களான பார்ப்பனர்கள். இப்படி இருக்க அதாவது ஒரு பார்ப்பனர் எல்லாக் காரியம் செய்துவிட்டு, கறுப்புச்சட்டை மீது பழிசுமத்தி அறிக்கைவிட்டபிறகு கறுப்புச்சட்டைப்படை பார்ப்பன வகுப்புக்கு விரோதமான படை என்றும் அது பார்ப்பனர்களுக்கு கேடுசெய்து வருகிறதென்றும் குற்றம்சாட்டி சர்க்காரிடம் முறையிட்டு இருப்பதன்மூலமே இந்தசம்பவங்களுக்கு வகுப்புத்துவேஷ உணர்ச்சியும் உண்டாக்கப்பட்டு விட்டபிறகு அதே உணர்ச்சியில் தலைசிறந்தவர் என்று பொதுமக்களால் குறிப்பாக திராவிட மக்களாலும் கருதப்பட்ட ஒரு பார்ப்பனரை நடவடிக்கையின்போது நேரில் இருந்த ஒரு பார்ப்பனரை விசாரணை அதிகாரியாய் சர்க்கார் நியமித்திருக்கிறார்கள் என்றால் இது இந்தியா முழுவதும் எப்படியோ விளம்பரம் ஆகிவிட்ட ஒரு அட்டூழியத்தைப் பூசி மெழுகி பார்ப்பனர்களும், பார்ப்பனப் பத்திரிகைகளும் வெளியாக்கிய அறிக்கைகளையும், சேதிகளையும் உறுதிப்படுத்தி கறுப்புச்சட்டைப் படையின்மீது பொதுமக்களுக்கு தப்பான எண்ணமும் காலித்தனத் தனத்தைப்பற்றி "சரிதான் அப்படி நடக்கவேண்டியது அவசியம் தான்" என்று கருதும்படியான தன்மையும் ஏற்படுத்தத்தானே அல்லாமல் வேறு எதற்கு என்று கருதுவது என்பது நமக்கு விளங்கவில்லை. தமிழ்நாட்டில் பார்ப்பனர் எவ்வளவு கட்டுப்பாடாக திராவிடர்களுடைய முன்னேற்றத்தைத் தடுத்து அவர்களுக்கு கேடும் இழிவு ஏற்பட வேலை செய்து வருகிறார்கள் என்று பார்த்தால் இந்த விசாரணைக்கு ஒரு பார்ப்பனரை அதிகாரியாய் நியமித்ததில் யாரும் ஆச்சரியப் பட முடியாதென்றே சொல்லலாம்.

தேசீயப்பத்திரிகை என்றும், காங்கரஸ் பத்திரிகை என்றும் சில சமயங்களில் பொதுவான பத்திரிகை என்றும் சொல்லிக்கொண்டு வாழும் சென்னை பார்ப்பனப் பத்திரிகைகள் ஒன்றாவது சரியாக நடந்துகொள்ளவே இல்லை. என்னவென்றால் மதுரை கலவரம்பற்றி ஒரு தோழர் வைத்தியநாதய்யர் கொடுத்த அறிக்கையை தக்க தலைப்புக்கொடுத்து நல்ல முக்கியமான இடத்தில் பிரசுரித்துவிட்டு, மாநாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. கொடுத்த அறிக்கையை சரியானபடி பிரசுரிக்காமல்மிகமிக சுருக்கியும், திருத்தியும் முக்கிய விஷயங்களை விட்டுவிட்டு ஏதோ ஒரு கவனிப்பு இல்லாத இடத்தில் 4வரி, 2வரி என்கின்ற மாதிரியில் பிரசுரித்தும் அறிக்கையை ஏளனம் செய்தும் விட்டன.

பல ஆயிரக்கணக்கான பேர் கூடி கூட்டின கூட்டத்தை, பல மைல் அதிக ஆடம்பரமாக நடந்த ஊர்வலத்தைப்பற்றியும் மற்றும் பல அதிசயங்களைப் பற்றியும் நாலுவார்த்தைகளில்கூட உண்மை காட்டாமல் விரோதமான காரியங்களை பெரிதும் கற்பனைகளை கலக்கணக்கில் பிரசுரித்தன என்றால் இந்தப்பத்திரிகைகளால் திராவிட சமுதாயத்திற்கு எவ்வளவு கேடுகள், எத்தனை காலமாக ஏற்பட்டு வந்திருக்கின்றன என்பது விளங்காமல் போகாது.

இப்படிப்பட்ட நிலை இந்த பெருமிதமான தொல்லையும் துன்பமும், நட்டமும், மானபங்கமும் அடையும்படியாக நடைபெற்ற அட்டூழியத்தை விசாரிக்க ஒரு பார்ப்பனரை நியமிப்பது என்பது எரிகிற நெருப்புக்கு எண்ணை ஊற்றுவதுபோல்தானே முடியும்?

அன்றியும் மதுரை கலவரம் சம்பவமாய்க் கிரிமினல் கோர்ட்டில் போலீசாரால் வழக்கு தொடரப்பட்டு பலர் கைதி செய்யப்பட்டும் இருக்கும் நிலையில் தனி விசாரணை என்பது ஒரு பார்ப்பனர் மூலம் நடத்தப்படுவது என்றால் இந்த விசாரணையில் நியாயம் கிடைக்காது என்கின்ற பயம் மாத்திரமல்லாமல், போலீசார் தொடுத்து இருக்கும் கிரிமினல் வழக்கையும் கேடுசெய்துவிட இது உதவுமோ என்றுகூட பயப்படவேண்டி இருக்கிறது. ஆகவே சர்க்காரார் அதாவது சட்டமந்திரி தோழர் பாஷ்யம் ஐயங்கார் இதையெல்லாம் யோசித்து தக்கது செய்வார் என்று கருதுகிறோம். அவர் அப்படி தக்கது செய்யவில்லையானால் அதில் கலந்துகொள்வதில் பயன் விளைக்குமா என்பது யோசிக்கத்தக்கதாகும்.

## பெரியார் ஈ. வெ. ரா

சென்னை மாநாட்டு அழை[ப்]பின் கட்டாயத்தினால் பெரி[யா]ரின் ஏற்காடு பயணம் நின்று[வி]ட்டது.

29-5-46 சின்ன சேலம் பொதுக்கூட்[டம்]
30— கள்ளக்குறிச்சி மாநாடு
31— திருக்கோவிலூர் பொதுக்கூட்[டம்]
1-6-46 வில்வாரணி நாடகம்
2— திருவண்ணாமலை மாநாடு
3— திருவத்திபுரம் திருமணம்
4— ஈரோடு அல்லது சென்னை

## உறக்கமா?

எங்குபார்த்தாலும் எழுச்சி இயக்கத்திற்கு ஒரு வளர்ச்சி என்று சொல்லிக் கொண்டேயிருந்தாலும் இன்னும் ஒரு இலட்சம் உறுப்பினர்கள் சேர்த்தபாடில்லை! எழுதிப்பெற்ற தோழர்களும் அமைதிக்கு வழியமைத்துக்கொண்டேயிருக்கின்றனர்!

நமது எண்ணம் ஈடேற நமதுமுயற்சி ஆரம்ப அசகாய சூரத்தனமாக இருக்கக் கூடாது. நாம் செய்யவேண்டியது எவ்வளவோ உண்டு. இருந்தாலும், கழகத்தின் சிறப்பு, அது பெற்றுள்ள உறுப்பினர்களைத்தான் சார்ந்திருக்கிறது.

ஆதலால் சிறப்பாக இளைஞர்களும் குறிப்பாக மாணவர்களும் உடன் கிளம்ப வேண்டும்! உடன் சேர்க்கவேண்டும்! இதுவே அவர்கள் ஆற்றும் முதற்பணி! பணியாற்ற கிளம்புங்கள்!

ரோஜா முத்தையா

## மதுரை விசாரணை

மதுரையில் மே 11, 12 நாட்க ரில் நடந்த கறுஞ்சட்டைப்படை முதலாவது மாகாண மாநாட்டுத் தலைவர் பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் கீழ்க்கண்ட அறிக்கை யை அரசினருக்கு தந்திமூலம் அனுப்பியிருக்கிறார்.

"மதுரைக் கலவர சம்பந்தமாக ...ரணைசெய்ய நியமிக்கப்பட் ...க்கும் அதிகாரியிடமிருந்து ...ரபட்சமற்ற நியாயம் கிடைக்கு ...ர என அஞ்சுவதாய் பல நம் ...ருந்த தோழர்களிடமிருந்து ...திகள் வருவதால் அவருக்குப் ...ாக ஒரு இந்தியரையோ, ...லது ஐரோப்பியரையோ முஸ் ...மையோ, பிராமணரல்லாதாரை ...ர நியமிக்க வேண்டும்"

மதுரையில் மே 12ந்தேதி நடை பெற்ற கறுஞ்சட்டைப்படை முத லாவது மாகாண மாநாட்டின் போது நடைபெற்ற காலித்தனத் தைப்பற்றி பகிரங்க விசாரணை நடத்த சர்க்கார் ஏற்பாடு செய் ததை வரவேற்பதாகவும், ஆனால் ஒரு பார்ப்பனர் நியமிக்கப்பட்டி ருப்பதால் நியாயம் கிடைக்குமோ என்று அஞ்சுவதாயும், மதுரை கறுஞ்சட்டைப்படை முதலாவது மாகாண மாநாட்டுக் காரியதரிசி தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர் கள் சென்னை சர்க்கார் பிரதம காரியதரிசிக்கும், சென்னை சர்க் கார் சட்டமந்திரிக்கும் ஓர் தந்தி யனுப்பியுள்ளார்.

(ஆரியப்பத்திரிகைகளும் குறிப் பாக ஆங்கிலப்பத்திரிகைகளும் மேற்கண்டசெய்திகளை வழக்கம் போல் பிரசுரிக்காமல் வேண்டு மென்றே விட்டிருக்கின்றன ஆ-ர்)

## கோவை மாவட்ட திராவிடர் கழக மாநாடு

ஈரோடு நாகம்மையார் பந்தலில்
16-6-46 ஞாயிறு நடைபெறும்
தலைவர்: S. R. சுப்பிரமணியம்
திறப்பாளர்:- குடந்தை
முத்துதனபால் B. A., B. L.,
கொடியேற்றுபவர்:-
பெத்தாம்பாளையம் தோழர்
பழனிச்சாமி

மற்றும் பெரியார், காஞ்சி—கலி யாணசுந்தரம், இளைய பட்டக் காரர் N. அர்ச்சுனன், நெடுஞ் செழியன், ஈ. வெ. கி. சம்பத், சனார்த்தனம், அன்பழகன், சிற வன் வீரமணி ஆகியோர் கலந்து கொள்வார்கள்.

அனைவரும் வருக!
நாடகமும் உண்டு
வரவேற்புக்கழகத் தலைவர்:-
எம். கே. குகநாதன்.
செயலாளர்கள்:- ஆர். ஊர்தசாமி,
ஆர். நாராயணசாமி.

# திராவிடர் கழகத்திற்கு

## (ஜஸ்டிஸ் கட்சிக்கு)

### 1-6-46ந் தேதி வரை அங்கத்தினர்கள் 46,137

இம்மாதம் 1ட வரை திராவிடர் கழகத்திற்கு தமிழ்நாட்டின் பல் வேறு இடங்களில் சேர்க்கப்பட்டு தலைமை நிலையத்திற்கு அனுப்பப் பட்டுள்ள அங்கத்தினர்களின் எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1. சேலம் | 7991 | 7. சென்னை இவ்வாண்டில் 1138 | 3008 |
| 2. தஞ்சை | 7503 | 8. இராமநாதபுரம் | 2883 |
| 3. கோவை | 6190 | 9. தென் ஆற்காடு | 2531 |
| 4. திருச்சி | 5496 | 10. மதுரை | 1809 |
| 6. வடஆற்காடு | 3488 | 11. செங்கல்பட்டு | 1000 |
| 5. திருநெல்வேலி | 3423 | 12. மற்ற இடங்களில் | 815 |

செயலாளர், மத்திய திராவிடர் கழகம், ஈரோடு

## மாணவர் சுற்றுப்பிரயாணம்

### தஞ்சை மாவட்டம்

தோழர்கள்: சிறவன் வீரமணி, புலவர் ஆறுமுகம், வி. வேணுகோபால், தில்லை வில்லாளன் ஆகியோர்.

4-6-46 பெருக வாழ்ந்தான்
5— திருக்களர்
6— ஆரியலூர்
7— பாமணி
8— தலைஞாயிறு
9— முத்துப்பேட்டை
காலை திருமணம்
மாலை கூட்டம்
10— அதிராம்பட்டினம்
11— ராசாமடம்
12— அறந்தாங்கி
13— பேறாவூரணி
14— அணைக்காடு
15— காலை நடுவிக்கோட்டை
மாலை ஒரத்தநாடு

மற்றவை பின்னர். கூட்டங்கள் நடத்த விரும்புகின்றவர்கள் கீழ்க்கண்ட முகவரிக்கு எழுதவேண்டுகிறேன். திருத் துறைப்பூண்டி வட்டக்கூட்டங்களில் திருத்துறைப்பூண்டித் தாலுக்கா திரா விடகழக வைத்தூண் தோழர் எம். கே. ஹாஜாபீர் அவர்களும், நாகை தோழர் என். பி.காளியப்பன் அவர்களும் கலந்து கொள்வார்கள்.

வி. எஸ். பி. யாகூப்,
C/o ஹாஜாபீர், ஜவுளி வியாபாரம்,
திருத்துறைப்பூண்டி.

### தென்னாற்காடு மாவட்டம்

தோழர்கள் புலவர் மாணிக்கம், அவர் கள் தலைமையில் மதியழகன், முத்தை யா, புலவர் நன்னன் ஆகியோர் பிரசா ரஞ்செய்து வருகின்றனர். மதுரை இராமானுசமும், புலவர் குஞ்சிதபாத மும் கலந்துகொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகின்றனர்.

4-6-46 மாலை தெற்குமேலூர்
இரவு வெள்ளையக்குப்பம்
5—மாலை கடலூர் N.T.
6—மாலை வண்டிப்பாளையம்
7—மாலை வரக்கால்பட்டு
8—மாலை புதுப்பேட்டை
இரவு பண்டாரக்கோட்டை
9—மாலை விரிஞ்சிப்பாக்கம்
10—மாலை கணிசப்பாக்கம்
11—மாலை பண்ருட்டி

மற்ற ஊர்கள் விவரம் அடுத்த இத ழில்!

## நடக்க இருப்பவை

● 3-6-46ல் பொத்தனூர் நிலக்கிழார் க. வீ. கருப்பையாபிள்ளை அவர்கள் மகன் திருச்சி மாணவத்தோழர் க. சண் முகம்—சுந்தராம்பாள் வாழ்க்கை ஒப்பந் தம் நடைபெறும்.

● 3-6-46ல் சேலூர் டி. பி. துரைசாமி படையாச்சி மகன் தோழர் டி. பி. டி. சமதருமனுக்கும் மணல்வெளி ராமய்யா படையாச்சி மகள் தோழியர் நாகவல்லிக் கும் கீவளூர் தோழர் ஆர். வீ. ராஜன் அவர்கள் தலைமையில் நாகை தோழர் டி. பி. ஆறுமுகம் அவர்கள் முன்னிலை யில் நடைபெறும்.

### மேலச்சென்னை திராவிடர் மாநாடு ஒத்திவைக்கப்பட்டதேன்?

விளம்பரப்படி மாநாடு 26-5-46ல் நடத்த முடிவுசெய்து பந்தல் முதற் கொண்டு எல்லாம் முடிவடைந்தபொ ழுது திடீரென 23ந் தேதி யன்று போலீசாரிடமிருந்து நடத்தக்கூடாதென கடிதம் வந்தது. நாலும் தோழர் அரசும் அதிகாரிகளைக்கண்டு பேசியும் பயன் படவில்லை.

மதுரை சம்பவம்பற்றி முதன்முதல் சென்னையில் பெரியார் அவர்கள் விளக்கிப் பேச இருந்த டை மாநாடு கடைசி நேரத்தில் தடைப்படுத்தப்பட்ட தால் பொருள் நட்டமே தவிர உணர்ச்சி க்கு நட்டமில்லை. இதுபோன்ற அதி காரத்தைக்கொண்ட அடக்குமுறைகளை காங்கிரஸ் ஆட்சியில் எதிர்பார்க்கத்தான் வேண்டும்!

மேற்படி மாநாட்டை பெரம்பூரில் நடத்த ஆவன நடைபெறுகிறது!

என். வி. நடராசன்
பொதுக்காரியதரிசி,
சென்னைஜில்லா திராவிடர் கழகம்.

### திருச்சி தோழர்கட்கு!

அங்கத்தினர் சேர்க்கப் பெற்றுச் சென்ற தோழர்கள் அமைதியாக இருப் பது காண வருத்தம் அதிகரிக்கச் செய்கி றது. உடன் தோழர்கள் உறங்காது கவனிக்க வேண்டுகிறேன்.

ஆர். சுலைமான்,
அமைப்பாளர், திருச்சி.

# விடுதலை! விடுதலை!!

## திராவிடர் தமிழ் தினசரி

ஜூன் முதல் வாரத்தில் வெளியாகும்

**சந்தா விவரம்**
(தபால் மூலம்)

| | |
|---|---|
| ஆண்டு 1க்கு | ரூ. 15-0-0 |
| 6-மாதத்திற்கு | ரூ. 8-0-0 |
| 3-மாதத்திற்கு | ரூ. 4-4-0 |
| 1-மாதத்திற்கு | ரூ. 1-8-0 |
| தனிப்பிரதி விலை | ரூ. 0-0-9 |

சென்னையிலும் ஏஜண்டுகள் உள்ள இடங்களிலும் மாதம் 1க்கு 1-4-0

**திராவிடத் தோழர்களே**

ஆங்காங்குள்ள திராவிடர் கழகத் தோழர்கள் உடனே சந்தாதார்களைச் சேர்த்தனுப்ப வேண்டுகிறோம்; ஒவ்வொரு கழகமும் ஒரு பிரதியாவது வாங்கவேண்டுவதோடு தனிப்பட்ட தோழர்களும் ஆதரிக்க வேண்டுகிறோம்.

ஏஜன்சி எடுக்க விரும்புவோர் பிரதி1க்கு ரூ. 1-4-0 வீதம் தேவையான பிரதிகளுக்கு டிபாசிட் முன்பணம் அனுப்பவேண்டும். இப்போதைக்கு ஏஜண்டுகளுக்கு பிரதி 1க்கு 3பை வீதம்கழிவு தரப்படும், பிற விவரங்களுக்கு எழுதித் தெரிந்துகொள்ளவும்.

விளம்பரம் அனுப்புவோர் விரைவில் அனுப்புக.

மானேஜர், "விடுதலை"
2, பாலகிருஷ்ணபிள்ளை தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.


(1ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுவாக இந்த காலித்தனத்துக்குக் காரணஸ்தர்களில் தோழர் வைத்தியநாத அய்யர் அவர்களே முக்கியமானவரும் முதன்மையானவரும் என்று பல இடங்களிலிருந்து சேதி வந்துகொண்டு இருக்கின்றன. அதற்கேற்றார்போல் கலவரத்துக்கு மறுநாளே மதுரைப் பார்ப்பனர்கள் ஒன்றுசேர்ந்து கறுப்புச்சட்டைப் படைக்காரர்களால் தங்களுக்கு பயமாயிருக்கிறதென்றும், மந்திரிகள் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்றும் பத்திரிகைகளில் அறிக்கை விட்டிருக்கிறார்கள். தோழர் வைத்தியநாத அய்யரும் "எங்க ஐயா குதிருக்குள் இல்லை" என்கிற பழமொழியை அனுசரித்துதான் இந்த கலவரத்தில் பிரவேசித்ததற்கு சமாதானம்சொல்லும் முறையில் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். அந்த அறிக்கை எந்த விதத்திலும் அதிகாரமுறையில் வைத்தியநாத அய்யருக்கு சம்பந்தப்பட்டதல்ல. அவர் மதுரையில் காங்கரஸ் பிரதிநிதி என்று ஒப்புக்கொள்ளப்பட்டவருமல்ல. அங்குள்ள காங்கரஸ் பார்ப்பனர் அல்லாதாருடைய வெறுப்புக்கு ஆளானவர் அப்படிப்பட்டவர் அபாண்டமான ஒரு அறிக்கையை வெளியிட முன்வந்தானது அவருடைய சம்பந்தத்தை உறுதிப்படுத்தத் தக்கதுஆகும். மந்திரி சபையோ பார்ப்பனர் ஆதிக்கத்தில் உள்ளது. சட்ட சமாதான மந்திரி பார்ப்பனர். இந்த நிலையில் நியாயம் பார்க்கவும், கிடைப்பதும் முடியாததாகும். மதுரை கலவரத்திலிருந்து இனி அவனவனுக்கு அவனவனேதான் பாதுகாப்புக்குப் பொறுப்பாகவேண்டும்.

இவ்வளவுநாள் திராவிடர் கழகம், கறுப்புச்சட்டை என்பதை யெல்லாம் எவ்வளவோ கட்டுப்பாடாக தந்திரமாக மறைத்து வைத்திருந்த பார்ப்பனபத்திரிகைகள் தங்களையும் அறியாமல் விளம்பரப்படுத்தும்படியான அளவுக்கு வந்துவிட்டார்கள். அவர்களின் விளம்பரத்தால் கறுப்புச்சட்டைப்படை, திராவிடர் கழகம் ஆகியவைகளின் சேதி இந்தியாவெங்கும் பரவ நேரிட்டதானது ஒரு நல்ல வாய்ப்பு என்றே சொல்லலாம். மதுரை சம்பவத்திற்கு பிறகும் நம்மவர்கள் பலர் இம்மாதிரி கூட்டங்களுக்கு கறுப்புச்சட்டை அணியாமல் வருவதும், நம்மிலேயே பலர் பரிகசிப்பதும் வருந்தத்தக்கதும், கண்டிக்கத்தக்கதும்ஆகும். இப்படிப்பட்டவர்களை பொதுமக்கள் வெறுக்கவேண்டும். இயக்கத்தில் கட்டுப்பாடான ஒற்றுமையையும் கூட்டுப் பொறுப்பையும் உண்டாக்கவேண்டியது மிகவும் அவசியம். அங்கத்தினர்கள் சேர்ப்பதைப்பற்றி யாரும் சரியானபடி கவலை யெடுத்துக்கொள்ளவில்லை. நிதி திரட்ட யாரும் முன்வரவில்லை. மற்றப்படி ஆங்காங்கு ஆடம்பரமான காரியங்கள் ஏராளமான பணச்செலவிலும் நடந்து வருகின்றன. தனிப்பட்டவர்களின் பெருமைக்கும் போகபோகத்துக்கும் பயன்படும்கட்சி பலன் அளிக்காது என்பதோடு நிலைநிற்காது என்றும் சொல்லலாம். சிறுபிள்ளைகளாய் இருக்கிறவர்கள் கட்சிக்காக உழைப்பதை முதலாவதாக வைத்துக்கொள்ளவேண்டும். எதிர்காலம் மிக்க நெருக்கடியானது என்பதை உணருங்கள். நம்முடைய வேலை முக்கியமானதும், கஷ்டமானதும நம்மைத்தவிர வேறு எவரும் செய்வதற்கு இல்லாததுமான காரியம் ஆகும். இதில ஒருவனுக்கு உண்மையான கவலை யிருக்குமானால் அவர்கள் தன்னலமறுப்புக்கு தயாராக இருக்கவேண்டியவர்கள் ஆவார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில் எதாவது நலன் ஏற்பட்டால்தான் உண்டு. வருங்காலம் நமக்கு மிக்க அடக்குமுறைக்காலமாய் இருக்கும். ஆதலால் சற்று கவலையோடு கவனிக்கவேண்டும் என்று வேண்டிக்கொள்ளுகிறேன்.

### அடுத்த வாரம்

குடந்தை மாநாட்டு செய்திகளும் இயக்கச் செய்திகளும் அடுத்தவாரம் வெளிவரும்; (ஆ-ர்)

### பட்டுக்கோட்டையில்!

பட்டுக்கோட்டை திராவிடர் கழக செயற்குழு புதிய நிர்வாகிகள் தேர்தல் 1946ம் ஆண்டிற்கு 8-6-46 சனியன்று காலை 8மணிமுதல் 1மணிவரை கலைமகள் வாசகசாலையில் நடைபெறும். தேர்தலில் கலந்துகொள்ள விரும்பும் திராவிட கழக அங்கத்தினர்கள் தங்கள் நாமினேஷன் பத்திரங்களை ரூ. 1 கட்டணத்துடன் முறைப்படி பூர்த்திசெய்[illegible] தோழர் என். ரத்தினசாமி வசம் [illegible] வித்து ரசீது பெற்றுக்கொண்டு, 6-6-4[illegible] ஷை இடத்தில் உள்ள தேர்தல் அதிகாரி தோழர் என். பி. காளியப்பன் அவர்கள் வசம் தாக்கல்செய்யவேண்டும். மொ[illegible] தம் 9 வார்டுகள் பிரிக்கப்பட்டு ஒ[illegible] வொரு வார்டுக்கும் ஒருவர் தே[illegible] தெடுக்கப்பெறுவார். பூரா விபரமு[illegible] கீழ்க்கண்டவர்களிடம் கேட்டுப்பெறுக!

தலைவர்: சி. நா. விசுவநாதன்.
செயலாளர்: கே. மாணிக்கம்
பொருளாளர். என். ரத்தினசாமி

### வருந்துகிறோம்

ஜஸ்டிஸ் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவராக யிருந்தவரும், 1921ம் ஆண்டு ஜஸ்டிஸ்கட்சி ஆட்சிசெய்த பொழுது கல்வி, மராமத்து இலாகா மந்திரியாகயிருந்து சென்னை யுனிவர்சிடி சட்டத்தில் சீர்திருத்தம் செய்தவருமான சர். ஏ. பி. பாத்ரோ அவர்கள் சென்னை ராயப்பேட்டை தமது இல்லத்தில் மே 26ந் தேதி இரவு காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

## கழகம் அமைத்தார்கள்

3-5-46ல் திருக்காரவாசல் பின்னவாசல் திராவிடர் கழகத்திற்கு 1946ம் ஆண்டிற்கு தோழர் வி. எஸ். ஆர். கோவிந்தசாமி தலைவராகவும், வி. எஸ். ஆர். மாணிக்கம் செயலாளராகவும் மற்றும் 15பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

o o

4-5-46ல் பெருகமணி திராவிடர் கழத்திற்கு தோழர்கள் பெரியசாமி தலைவராகவும், மலையாளம் செயலாளராகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

o o

3-5-46ல் சித்திரை திருமகாசபுரம் திராவிட இளைஞர் கழகத்திற்கு தோழர்கள் எஸ். இராமன் தலைவராகவும், எஸ். கைலாசம், எ. மகாலிங்கம் செயலாளராகவும் மற்றும் 9பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

### மறைவு

சென்னை பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் தோழர் அன்பு-கணபதியவர்களின் வாழ்க்கைத் துணைவி தோழியர் அன்பவல்லி தஞ்சையை அடுத்த பசுபதி கோயிலில் சென்ற சில நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்து 23-5-46ல் திடீரென உயிர்நீத்தமைக்கு தோழர் ராசமாணிக்கம் தனது அனுதாபத்தை தெரிவிக்கிறார்.

## ஒழியாதா சாதிப்பேய்?

பொள்ளாச்சிக்கடுத்த வடசித்தூர் கிராமத்தில் 18-5-46ல், காங்கரஸ் தியாகியும், சத்தியாக்கிரகியுமான பெருமான் முதலியார் நடத்திவரும் ஸ்ரீ முருகன் லஞ்சு ஹோமில் ஷை ஊரில் ஆசிரியராயுள்ள தோழர் கே. ராயப்பன் என்ற ஆதிதிராவிட சமூகத்தைச்சார்ந்தவர் "காப்பி சாப்பிடலாமா?" என்று கேட்க, மானேஜர் மறுக்க வந்தவழியே பள்ளிக்குச்சென்று விட்டார். செய்தியிவ்வளவுதான்! இதை யறிந்த சாதி இந்துக்கள் சாத்திரம் அழிக்கப்படுவதா? சண்டாளன் நம்முடன் உண்ண வருவதா? இது அடுக்குமா? இனி நம்மிடம் பெண்கூட கேட்க வருவான் என்று ஆவேசத்துக்கு அஸ்திவாரம் செய்துகொண்டு அந்த ஆசிரியரின் உயிரையும் போக்கத்துணிந்து ஆயுதந் தாங்கி ஆதிதிராவிடச் சேரியைச் சூழ்ந்தனர். பயந்த பாமரர்கள் பதுங்கியதோடு பாதவிக்கலாயினர்! இதை யறிந்த ஒரு முஸ்லிம் பெரியார் இடத்துக்கு வந்து நிலைமையைச் சாந்தமாக்கி யாவரையும் இட்டுச் சென்றார். செய்திபெற்ற கிணற்றுக்கடவு போலீஸ் இன்ஸ்பெக்டர் வந்து இரவு 8மணிக்கு கூட்டத்தைக் கலைத்தார்.

ஆசிரியர் கே. ராயப்பனும் இனி அவ்வூரில் இருப்பது இயலாதென எண்ணி சப் இன்ஸ்பெக்டர் உதவியால் தன் ஊர் வந்தார். இந்த இருபதாம் நூற்றாண்டிலும் இச்செய்தியறிய "நெஞ்சு பொறுக்குதில்லையே! நிலைகெட்ட மாந்தரை நினைந்துவிட்டால்!" என்று பாதவிக்கத்தான் தூண்டுகிறது! (ஒரு நிருபர்)

## மெரினா கடற்கரையில் திராவிடர் கூட்டம்

7-5-46 செவ்வாய் மாலை 6மணிக்கு மயிலாப்பூர் மெரினா கடற்கரையில் தோழர் ஆர். சம்பந்தமூர்த்தி அவர்கள் தலைமையில் மயிலாப்பூர் திராவிடர் கழகங்கள் சார்பில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. புலவர் தியாகராசன் பேசியபின் பெரியார் ஈ. வெ. ரா, அவர்கள் நீண்டநேரம் தற்கால அரசியல் நிலைபற்றி விரிவாகப் பேசினார்கள். நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது.

## பிறப்பு

ஆலத்தம்பாடி திராவிடர் கழகச் செயலாளர் தோழர் சுப்பிரமணியத்தின் துணைவியார் அஞ்சம்மாளுக்கு29-3-46 தேதி ஆண் குழந்தை பிறந்து தோழர் பாண்டியன் அவர்களால் செங்குட்டுவன் என்று பெயர் வைக்கப்பட்டது. குடி அரசுக்கு ரூ. 1. அளிக்கப்பட்டது.

நெல்லை எ. வி. முத்தையாபிள்ளை அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் நடத்திக்கொண்ட பம்பாய் தோழர் கே. எஸ். பாலகிருஷ்ணன் அவர்கள் வாழ்க்கைத் துணைவியாருக்கு 27-4-46ல் ஓர் ஆண்மகவு பிறந்து தாயும் சேயும் நலமாயுள்ளனர்.

o o

திருப்பூர் தோழர் சி. அருணாசலம் அவர்கள் தாயார் 14-4-46ல் தம் 85வது வயதில் இயற்கையெய்தியதின் நினைவாகவும், தம்முடைய கடைசி பெண் குழந்தைக்கு மணியம்மை எனப் பெயரிட்டதை முன்னிட்டும் குடி அரசுக்கு ரூ. 5. நன்கொடை அனுப்பப்பட்டது.

## மதிப்புரை

**கலப்புமணக்காதலர் தெம்மாங்கு:**

திண்டுக்கல் நம் இயக்கத்தோழர் எம். ஆர். மத்திரான் இயற்றிய தெம்மாங்கு படிப்பவர் நாவினிக்கக் கேட்பவர், செவி மணக்க அழகிய எளிய நடையில் அமைந்துள்ளது. அனைவரும் படிக்கவேண்டியதே! விலை அணா 3.

**தமிழகம்:**

திருச்சி தெப்பக்குளத்திலிருந்து தோழர் எஸ். எம். சஞ்சீவி ராசுவை பதிப்பாசிரியராகக்கொண்டு வெளிவரும் முதல் வெளியீடு கவிதை, கட்டுரை ஆராய்ச்சி, கற்பனைகள் செறிந்து, சிறந்த முறையில் அழகான அட்டைப் படத்துடன் வெளிவந்துள்ளது.

விலை அணா நான்குதான்!

**போர்முரசு:**

அயர்ந்த உள்ளத்தை அடித்து எழுப்ப, உயர்ந்த வாழ்வுக்கு உழைக்க அழைக்க உணர்ச்சியைச் சொல்லாக்கி எழுதியிருக்கிறார் அன்பர் அப்துல் ரசாக். வேண்டுவோர்.- சி. சுந்தரம்,உப்புக்காரத் தெரு, மன்னார் குடிக்கு 2¼ அணா அனுப்பிப் பெறுக!

**தன்மானத் தாலாட்டு:**

திராவிடத்தின் சிறப்பிலே மலரிருக்கும் சேய்களுக்கு அன்னையின் ஆசை யன்போடு அறிவியக்கத்தையும் ஊட்டி அறியாமைக்கு சாவுமணி அடிக்க எழுப்புகிறது இந்தத்தாலாட்டு!

அனைவரும் படிக்கவேண்டியதே! விலை அணா 2½.

இலக்குமி நூல் பதிப்பகம், திருவத்திபுரம். வ. ஆ என எழுதிப்பெறுக!

**இஸ்லாமிய தாரகை:**

இஸ்லாமிய எண்ணங்களை எடுத்துக் கூறி அழகியமுறையில் கொழும்புவிலிருந்து வெளிவரும் வாரஇதழ். ஆசிரியர் முகம்மது சாலிஹ். விலை அணா 2.

**சிறையில் மணிகள்:**

திராவிடப் பூங்காவில் திகழ்ந்த இரு மணமலர்கள் சிறையிலே வதங்கி வாடுகின்றனர். உயிருடன் வதையும் கலைமணிகள் கிருஷ்ணன்—பாகவதரின் வாழ்க்கையை விளக்கியிருக்கிறார் தோழர் நெடுமாறன்.

விளக்கியிருப்பது "வீரம் செறிந்த திராவிடா! வீணே இருக்கிறாயே?" என்ற வேதனையின் எதிரொலிதான்!

அவசியம் அனைவரும் படிக்கவேண்டியது! விலை நாலணா.

வெளியிடுவோர்:- புரட்சிப் பதிப்பகம், செல்வம் மளிகை, ஜெனரல் மார்கட், திருச்சி.

## இளந் திராவிடர் கழகம்

13-4-46ல் கூடலூர் O. T. வீரபத்திரசாமி கோயில் தெரு தோழர் பெருமான் அவர்கள் மேல்மாடியில் தோழர் எ. பி. சனார்த்தனம் எம். ஏ., அவர்களால் இளந் திராவிடர் கழகம் திறக்கப்பட்டு தோழர்கள் கி. வீரமணி (10வயது) தலைவராகவும், பெ.லெனின் (10வயது) செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. மாலையில் திரௌபதியம்மன் கோயில் திடலில் தோழர் பெருமான் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர் சனார்த்தனம் அவர்கள் அரிய சொற்பொழிவாற்றினார்.

## வாழ்க்கை ஒப்பந்தங்கள்

19-4-46ல் சென்னை புரசை தோழர் பி. எம். வேணுகோபால் அவர்களுக்கு தோழர் ஜே. சிவசண்முகம் எம். ஏ., எம். எல். சி., அவர்கள் தலைமையில் சீர்திருத்த முறையில் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

o o

21-4-46ல் தூத்துக்குடி தோழர் பொன்னுசாமிநாடார் அவர்கள் மகன் மகாராசனுக்கும், கோவில்பட்டி சங்கரலிங்கம்பிள்ளை அவர்கள் மகன் தங்கத்திற்கும் கோவில்பட்டியில் தூத்துக்குடி தோழர் ஆதிமூலம் அவர்கள் தலைமையில் கலப்புமணம் நடைபெற்றது. இதை நடத்துவிக்க தோழர் தில்லை அதிக முயற்சி எடுத்துக்கொண்டார். குடி அரசு வளர்ச்சிக்கு ரூபா 1. அளிக்கப்பட்டது.

o o

செங்கம் தாலுக்கா நாராயணகுப்பம் தோழர் கோவிந்தசாமிக்கும் தோழியர் பட்டம்மாளுக்கும், திருவண்ணாமலை கம்மவார் மடத்தில் தோழர் பாலகிருஷ்ணன் அவர்கள் தலைமையில் 29-4-46 காலை 9மணிக்கு வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றது.

o o

திருச்சி தமிழ்நாடு விதவா விவாக சங்க ஆதரவில் 12-4-46ல் ஜே. எஸ். இராமானுஜம் பி. ஏ., பி. எல்., அவர்கள் தலைமையில் அரண்மனைக்குறிச்சி தோழர் சி. கோவிந்தசாமி பிள்ளைக்கும், திருமலவாடி தோழியர் நா. பாப்பா அவர்களுக்கும் சீர்திருத்த மணம் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். குடியரசு வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் அளிக்கப்பட்டது.

o o

திருச்சி தமிழ்நாடு விதவாவிவாக சங்க ஆதரவில் 28-4-46ல் ஜே. எஸ். இராமானுஜம் பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் கரூர் தாந்தோனியிலிருக்கும் தோழர் க. சந்தனத்திற்கும் மேற்படியூர் தோழியர் ம. காமாட்சி அம்மாளுக்கும் பதிவு திருமணம் நடைபெற்றது.

## தென்னார்க்காடு மாவட்ட திராவிடர் கழகம்

6-5-46 திங்கள் மாலை 6-மணிக்கு கூடலூர் O. T. திராவிடர் கழகத் தலைவர் தோழர் வி. கே. எஸ். சண்முகசுந்தரம் அவர்கள் தலைமையில் தோழர் காஞ்சி கலியாணசுந்தரம் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற தென்னார்க்காடுஜில்லா திராவிடர் கழக அமைப்புக் கூட்டத்தில் தோழர்கள் சி. முனுசாமி தலைவராகவும், பி. பழனிசாமி துணைத் தலைவராகவும், வி. கே. எஸ். சண்முகசுந்தரம் செயலாளராகவும், ஆர். சரவணன் துணைச் செயலாளராகவும் மற்றும் 25பேர் உறுப்பினர்களாகவும் கொண்ட ஜில்லா நிர்வாகக் கமிட்டி தேர்ந்தெடுக்கப்பட்டது.

மாணவர் சுற்றுப்பிரயாண ஏற்பாட்டை சிதம்பரம் புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் பொறுப்பில் விடுவதென தீர்மானிக்கப்பட்டது.

---

10-4-46ல் நடைபெற்ற கணியூர் திராவிடர் கழகக் கூட்டத்தில் கணியூர் கழகத்திற்கு நிதி சேர்க்க சங்கீத வித்வான் A. D. சுந்தரன் அவர்களைக் கொண்டு கச்சேரி நடத்த கமிட்டி நியமிக்கப்பட்டது.

# இயக்கச் செய்திகள்

14-4-46ல் சென்னை அரும்பாக்கத்தில் தோழர் சா. து. மு. பழனிச்சாமி அவர்கள் தலைமையில் திராவிடர் கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்று பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

o o

7-4-46ல் சின்னாளப்பட்டிக்கு அடுத்த கலிக்கம்பட்டியில் தோழர் பி. டி. பாப்பையா தலைமையில் பெற்றோர் சங்க திறப்புவிழா நடைபெற்று தோழர் எஸ். ஆர். பி. இராமசாமி வேலுருத்திர மூர்த்தி, எஸ். சேதுபதி முதலிய பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

• •

13-4-46ல் சண்பகராயநல்லூரில் சனிச்சந்தையடியில் தோழர் சோ. சதாசிவம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் ஷம்சுதீன், வடிவேலு, கு. முத்தப்பா, தியாகராசன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். வி. இராமச்சந்திரன் நன்றி கூறினார்.

o o

1-4-46ல் நடைபெற்ற நுங்கம்பாக்கம் திராவிடர் கழக கமிட்டிக் கூட்டத்தில் 5-5-46ல் சன் தியேட்டரில் நுங்கம்பாக்கம் தியாகராயநகர் திராவிடர் மாநாடு நடத்துவதென முடிவு செய்யப்பட்டது.

• •

7-4-46ல் சிறுத்தொண்டநல்லூர் திராவிடர் கழக சார்பில் தோழர் சீனி அவர்கள் தலைமையில் ஆறுமுக மங்கலத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ச. சிவசங்கு, சங்கரப்பழம் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

o o

10-4-46ல் தேசூர் தோழர் வீ. பா. இரங்கசாமி தலைமையில் நடைபெற்ற வந்தவாசி தாலுக்கா திராவிடர் கழக அங்கத்தினர்கள் கூட்டத்தில் மேற்படி தாலுக்கா 2வது மாநாட்டை மேமாத இறுதியில் நடத்தவும் 21-4-46ல் வரவேற்பு கமிட்டிக்கூட்டம் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது.

• •

12-4-46ல் சேடர்பாளையம் திராவிடர் கழகச்சார்பில் விழாங்குட்டை பங்காடும் மைதானத்தில் புலவர் மணி மன்றாடி அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் புலவர் இரா. எழில் நிலவன் அவர்கள் புதுவை பொன்மொழியார் என்னும் பொருள் பற்றி அரிய சொற்பொழிவாற்றினார்.

o o

7-4-46ல் நடைபெற்ற பெரியகுளம் திராவிடர்கழகக் கூட்டத்தில் மதுரை மாநாட்டிற்கு ஒத்துழைக்க முடிவு செய்யப்பட்டு தோழர்கள் திருவேங்கடம், வி. இராமையா, பி. பழனி முதலியோர் மேற்படி மாநாட்டிற்கு வரவேற்புக் கழக அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

o o

13-4-46ல் வடார்க்காடு அரக்கோணம் திராவிடர் கழகச் சார்பில் வேலூர் தோழர் டி. அரசு தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தோழர்கள் குப்புசாமி, க. அன்பழகன், C. D. T. அரசு, என். வி. நடராசன் ஆகியோர் "திராவிடர் நிலை" என்பதுபற்றி சொற்பொழிவாற்றினர். இஸ்லாமியத் தோழர்களும் உடனிருந்து கூட்டத்தை நடத்த உதவினர்.

o o

11-4-46ல் சாத்தூர்தாலுக்கா ஒத்தையார் கிராமத்தில் திராவிட விவசாயத் தொழிலாளர் கூட்டம் தோழர் பி. இராசாமணி அவர்கள் தலைமையில் நடைபெற்று தோழர்கள் சேதுராமன் முதலியோர் பேசினார்கள்.

o o

14-4-46ல் மதுரை சந்தப்பேட்டை திராவிடர் கழகத்தின் சார்பாக மதுரை ராமனாட் ரோட் சௌராஷ்ட்ரா உயர்நிலைப்பள்ளி முன்பாக தோழர் பி. செங்குட்டுவன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர் பு. ரா. மதிவாணன் திராவிடர் கழகக் கொடியேற்றிவைத்தார். திருச்சி தலைவர் டி. பி. வேதாசலம் அவர்களும் தோழர்கள் மு. ராசகோபால் பி. எ., கே. எஸ். ராசமான் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

o o

3-4-46ல் திருச்சி பொன்மலை திராவிட வாலிபர் கழகக்கமிட்டிக் கூட்டம் தோழர் ஜி. பராங்குசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. "சிவாஜிகண்ட இந்து ராஜ்யம்" என்னும் நாடகத்தை விரைவில் நடத்த முடிவு செய்து அதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்க 13பேர் கொண்ட கமிட்டி அமைக்கப்பட்டது. 5-4-46ல் நடைபெற்ற மேற்படி கமிட்டிக்கூட்டத்தில் தோழர் வி. எஸ். பெருமாள் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

• •

7-4-46 திருச்சி டவுன்ஹாலில் திருச்சி பெரியார் இளைஞர் கழகத்திறப்புவிழாவும், சிறைசென்று மீண்ட பட்டுக்கோட்டை தோழர் சாமிநாதனுக்கும் வரவேற்பு நடைபெற்றது. தோழர் என். முத்துசாமி தலைமை வகித்தார் தோழர்கள் க. அன்பழகன், சாமிநாதன், புலவர் குழந்தையா, டி. கே. மகாதேவன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். மணக்கூண்டிலிருந்து கறுப்புச்சட்டைப்படை ஊர்வலமும் நடைபெற்றது.

o o

28-4-46ல் நடைபெற்ற திருச்சி பெரியார் இளைஞர் கழகக்கூட்டத்தில் வரவுசெலவு கணக்குப் பரிசீலனை செய்யப்பட்டு மத்தியதிராவிடர் கழகத்திற்கு அங்கத்தினர்கள் சேர்க்கமுடிவு செய்யப்பட்டது.

o o

தூத்துக்குடி சௌந்திரபாண்டியன் தமிழர் சமதர்ம சங்கக் கமிட்டிக் கூட்டத்தில் சென்னை மா. சிங்காரவேல், தூத்துக்குடி பெ. பால் அவர்கள் மகன் திராவிடமணி, எ. செல்லத்துரை அவர்கள் தமையனார் மனைவி அருணாசல வடிவம்மாள் ஆகியோர் இயற்கையெய்தியதுபற்றி அனுதாபம் தெரிவிக்கப்பட்டது.

## நீத்தார் நினைவு

அருப்புக்கோட்டை சவுந்திராசபுரம் தெரு தோழர் எம். சண்முகவேலன் அவர்களின் தந்தை இயற்கையெய்தியதை முன்னிட்டு 26-4-46ல் நீத்தார் நினைவு புரோகிதம் ஒழித்து புலவர் சோ. கந்தசாமி அவர்கள் தலைமையில் நடத்தப்பெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினார்கள். குடி அரசுக்கு ரூ. 1 அளிக்கப்பட்டது.

## தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம்

31-3-46ல் ஓரோட்டுக்குப்பை செட்டியார் பாளையம் ஆதிதிராவிட வாலிப சங்க ஆண்டுவிழா தோழர் சுப்பு தலைமையில் நடைபெற்று பல தோழர்கள் அரிய சொற்பொழிவாற்றினர்.

o o

1-4-46ல் உரிகம்—தாழ்த்தப்பட்டோர் இளைச்சங்க ஆதரவில் டாக்டர் அம்பேத்கார் பிறந்ததின்விழா கொண்டாடப்பெற்றது.

o o

14-4-46ல் சமுத்திரம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனச் சார்பில் தோழர் வையாபுரி தலைமையில் டாக்டர் அம்பேத்கார் பிறந்தநாள் கொண்டாடப்பெற்றது.

o o

7-4-46ல் தூத்துக்குடி போல்டன் புரம் தாழ்த்தப்பட்டோர் சம்மேளனம் திறப்புவிழா தோழர் எல். மாடசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

o o

எப்ரல் 14முதல் 21வரையில் தூத்துக்குடி நகர ஷெடியூல்ட் வகுப்பு பெடரேஷன் சார்பில் டாக்டர் அம்பேத்கார் பிறந்நாள் விழா கொண்டாடப்பெற்றது.

o o

12-4-46ல் கருங்குளம் தாலுக்கா ஆதிதிராவிட கழகச்சார்பில் தோழர் தையான் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

o o

14-4-46ல் மங்கம்மாள்புரம் ஆதிதிராவிட வாலிபர் கழகச் சார்பில் டாக்டர் அம்பேத்கார் பிறந்நாள் விழா கொண்டாடப்பெற்றது.

o o

17-3-46ல் திண்டிவனம் தாலுக்கா சிங்கனூர் தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் அமைக்கப்பட்டு 20-4-46ல் டாக்டர் அம்பேத்கார் பிறந்நாள் விழா கொண்டாடி, 28-4-46ல் தோழர் எம். சகந்நாதன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடத்தினர். பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

## பெயரிடல்

கட்டிப்பாளையம் தோழர் சருப்பண்ணன்—சின்னம்மாளுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கு 27-5-46ல் விசுவநாதன் எனப் பெயரிட்டமைக்காக குடி அரசுக்கு ரூ. 1 அளிக்கப்பெற்றது.

## திராவிடநாடு பகுத்தறிவு நிலையம்

மேற்படி நிலைய மூன்றாவது மாதாந்திரக்கூட்டம் 29-4-46ல் தோழர் எஸ். பெரியசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்று கழக அலுவல்கள் கவனிக்கப்பட்டதன்பின் தோழர் எஸ். டி. அகஸ்டின் அவர்கள் பகுத்தறிவுபற்றி சொற்பொழிவாற்றினார்.

## வரவு செலவு

பட்டுக்கோட்டையில் 7-5-46ல் நடைபெற்ற திராவிட மாணவர் கழக ஆண்டு விழா வரவு ரூ. 308-4-0, செலவு ரூ. 272-6-9, மீதி ரூ. 35-13-3 கழக நிதியாக இருக்கிறதென பொருளாளர் இரெ. சேதுராமன் அறிவிக்கிறார்.

---

Edite, Printed, and Published by N. Karivaradaswamy at the Tamilan Press 42, Catchery street, ERODE.